**செய்தி வெளியீடு எண்: 319** **நாள்: 06.06.2019**

## <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (6.6.2019) முகாம் அலுவலகத்தில், ஜம்மு - காஷ்மீர் மாநிலம், புல்வாமா மாவட்டத்தில் 14.2.2019 அன்று தீவிரவாதிகள் நிகழ்த்திய பயங்கர தாக்குதலில் உயிரிழந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த மத்திய ரிசர்வ் காவல் படை வீரர்கள் திரு. சுப்ரமணியன் மற்றும் திரு. சிவசந்திரன் ஆகியோரது குடும்பத்தினருக்கு சென்னை பெருநகர காவல்துறையின் சார்பில் தலா 14 லட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 28 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்கள்.

ஜம்மு - காஷ்மீர் மாநிலம், புல்வாமா மாவட்டத்தில் 14.2.2019 அன்று தீவிரவாதிகள் நிகழ்த்திய பயங்கர தாக்குதலில், மத்திய ரிசர்வ் காவல் படையினர் பலர் உயிரிழந்தனர். இத்தாக்குதலில், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், சவலப்பேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. கணபதி என்பவரின் மகன் திரு. ஜி. சுப்ரமணியன் மற்றும் அரியலூர் மாவட்டம், கார்குடியைச் சேர்ந்த திரு. சின்னையன் என்பவரின் மகன் திரு. சி. சிவசந்திரன் ஆகிய இரண்டு வீரர்கள் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் அக்குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்ததோடு, அக்குடும்பங்களுக்கு தலா 20 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கிட 15.2.2019 அன்று உத்தரவிட்டார்கள். அதன்படி, தமிழ்நாடு அரசின் சார்பில் உயிரிழந்த மத்திய பாதுகாப்புப் படை வீரர்கள் திரு.சுப்ரமணியன் மற்றும் திரு. சிவசந்திரன் ஆகியோரது குடும்பங்களுக்கு தலா 20 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது. அத்துடன், உயிரிழந்த திரு.ஜி.சுப்ரமணியன் அவர்களின் மனைவி திருமதி கிருஷ்ணவேணி மற்றும் திரு.சி.சிவசந்திரன் அவர்களின் மனைவி திருமதி காந்திமதி ஆகியோருக்கு கருணை அடிப்படையில் அரசு வேலைக்கான பணி நியமன ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 27.2.2019 அன்று வழங்கினார்கள்.

தீவிரவாதிகளின் தாக்குதலில் உயிரிழந்த மத்திய பாதுகாப்புப் படை வீரர்கள் திரு.சுப்ரமணியன் மற்றும் திரு. சிவசந்திரன் ஆகியோரின் தியாகத்தை போற்றும் வகையிலும், அக்குடும்பத்தினருக்கு உதவிடும் வகையிலும், சென்னை பெருநகர காவல்துறை சார்பில், திரு.ஜி.சுப்ரமணியன் அவர்களின் மனைவி திருமதி கிருஷ்ணவேணி மற்றும் திரு.சி.சிவசந்திரன் அவர்களின் மனைவி திருமதி காந்திமதி ஆகியோருக்கு தலா 14 லட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 28 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று வழங்கினார்கள்.

இந்த நிகழ்வின்போது, காவல்துறை தலைமை இயக்குநர் திரு. டி.கே. ராஜேந்திரன், இ.கா.ப., சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் முனைவர் அ.கா. விஸ்வநாதன், இ.கா.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 6.6.2019**